தினகரன் 9/12/2017

# டிஎன்பிஎல் சார்பில் இலவச சிறுநீரக பரிசோதனை முகாம்




டிஎன்பிஎல் சார்பில் காகிதபுரத்தில் இலவச சிறுநீரக பரிசோதனை முகாம் நடைபெற்றது.

## 265 பேர் பங்கேற்பு

க.பரமத்தி, டிச.9: காகிதபுரத்தில் நடந்த இலவச சிறுநீரக பரிசோதனை முகாமில் 265 பேர் பரிசோதனை செய்து கொண்டனர்.

கரூர் டிஎன்பிஎல் நிறுவனம், சென்னை தமிழ்நாடு கிட்னி ரிசர்ச் பவுன்டேஷன் சார்பில் நடந்த முகாமிற்கு டிஎன்பிஎல் செயல் இயக்குநர் (இயக்கம்) வெங்கடராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். பொது மேலாளர்கள் லோகநாதன், பாலசுப்பிரமணியன், தங்கராசு முன்னிலை வகித்தனர். முகாமில் கலந்து கொண்ட 265பேருக்கு மருத்துவ குழுவினர் பல்வேறு பரிசோதனை செய்து ஆலோசனை வழங்கினர். டிஎன்பிஎல் துணை பொது மேலாளர் டேவிட் மாணிக்கம் உள்பட பொது மேலாளர்கள், துணை மேலாளர்கள் பங்கேற்றனர்.

இந்த முகாமிற்காக புன்னம் சத்திரம், தளவாபாளையம், நொய்யல் குறுக்குசாலை, வேலாயுதம்பாளையம் மற்றும் ஓனவாக்கல்மேடு ஆகிய வழித்தடங்களில் இலவச பேருந்து வசதி செய்யப்பட்டிருந்தது. ஏற்பாடுகளை காகித ஆலை நிர்வாகம், மகளிர் மன்றம், மகளிர் மனமகிழ் மன்றத்தினர் செய்திருந்தனர்.